# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 49/2022 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | வேலு | நாள் | 06.01.2025 |
| தகப்பனார் பெயர் | முத்துக்கவுண்டர் | | |

**8 ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

11) 1 ம் பிரதிவாதி மாதேஸ் என்பவர் எனக்கு தெரியாமல், சொத்தை 8 ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துவிட்டார் என்பதால்தான் 8 ம் பிரதிவாதியை இவ்வழக்கில் கட்சி சேர்த்துள்ளேன் என்றால், சரிதான். தாவா சொத்து அமைந்துள்ள அதே சர்வே எண்ணில் சில பகுதிகளை 1 ம் பிரதிவாதி மேலும் சில நபர்களுக்கு விற்பனை செய்துள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது.

12) கடந்த 30.06.2004 ம் தேதியில், 1 ம் பிரதிவாதியும், அவரது மைனர் வாரிசுகளும் சேர்ந்து பத்திர எண்.1675/2004 ன்படி, ச.எண்.307/16 ல் சுமார் 1308 சதுரடி நிலத்தை ராஜா என்பவருக்கு விற்பனை செய்துள்ளனர் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. கடந்த 20.03.2009 ம் தேதியில் நானும், என் இதர சகோதரர்களும் சேர்ந்து 1 ம் பிரதிவாதிக்கு ச.எண்.307/16C ல் 0.06 சென்ட் நிலத்தை செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தியுள்ளோம் என்றால், சரியல்ல.

13) கடந்த 10.07.2009 ம் தேதியில், பத்திர எண்.2626/2009 ன் படி, 1 ம் பிரதிவாதியும், ஒரு கணேசன், மற்றும் கார்த்தி ஆகியோர் சேர்ந்து ச.எண்.307/16C ல் 0.10 சென்ட் நிலத்தை தங்கம்மாள் என்பவருக்கு கிரயம் அளித்துள்ளனர் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. கடந்த 08.09.2011 ம் தேதியில் 1 ம் பிரதிவாதி, கந்தசாமி மற்றும் வீரப்பன் ஆகியோர் சேர்ந்து ச.எண்.307/16B ல் 0.01 சென்ட் நிலம் குறித்து ஒரு உடன்படிக்கை ஏற்படுத்தியுள்ளனர் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது.

14) 1 ம் பிரதிவாதி தாவா சொத்திற்குரிய ச.எண்.307/16 ல் உள்ள நிலங்களை பொறுத்து, பல்வேறு நபர்களை பொறுத்து உரிமை ஆவணங்கள் ஏற்படுத்தியுள்ள நிலையில்,

மேற்படி நபர்கள் யாரையும் இவ்வழக்கில் நான் கட்சி சேர்க்கவில்லை என்றால், சரியல்ல. எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் சுமார் 50 வருடங்களுக்கு முன்பு வாய்மொழிபாகம் பிரிந்துவிட்டது என்றால், சரியல்ல. மேற்படி 1ம் பிரதிவாதி தனக்கு வாய்மொழி பாகம் மூலம் பிரிந்த பாகத்தை 8ம் பிரதிவாதிக்கு விற்கவில்லை என்றால், சரியல்ல.

15) கடந்த 20.02.2006ம் தேதியிட்ட கிரய பத்திரத்திலேயே மேற்படி சொத்து 1ம் பிரதிவாதிக்கு பிதுர்ராஜ்ஜிமாகவும், வாய்மொழிபாகமாகவும், பாத்தியப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ள நிலையில், அவ்வாறு வாய்மொழி பாகம் எதுவும் ஏற்படவில்லை என பொய்யாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

(8ம் பிரதிவாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/—திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.